# கவிதை

ஓராண்டு நிறைவிதழ்

இளங்கவிஞர்களுக்கான
இருதிங்கள் ஏடு

ஆசிரியர்:
அ. யேசுராசா

தேர் : 1
உலா : 6

மாசி - பங்குனி 1995

1, ஓடைக்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

## நன்றி!

இவ்விதழுடன், உங்கள் அபிமான இதழான 'கவிதை'க்கு ஓராண்டு நிறைகிறது.

முதலிதழில் தெரிவித்த நோக்கங்களை எந்தளவுக்கு அது நிறைவேற்றியிருக்கிறதென்பதை, நீங்கள்தான் மதிப்பிட வேண்டும்

எழுத்தாளனொருவனின் சொந்த நூல் வெளியீட்டிற்கும், ஒரு சஞ்சிகை வெளியீட்டிற்குமிடையில் முக்கிய – அடிப்படையான வேறுபாடு இருக்கிறது; பின்னையதில் பலரின் ஆக்கங்களுக்குக் களம் அமைத்து, அவர்களின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யும் ' பரந்த நோக்கு ' இருக்கிறது.

துரதிர்ஷ்டவசமாக, இப்பரந்த நோக்குக் கொண்ட முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான முறையில் ஒத்துழைப்பு வழங்கவேண்டிய 'தார்மீகப் பொறுப்புணர்வு' எமது கலாசாரவாதிகள் பலரிடம் இல்லை.

'கவிதை'க்கு நிறுவன பலம் ஏதும் இல்லை.

ஆயினும், இதுவரை ஆறு இதழ்கள் வெளிவந்திருப்பதற்கு வெறுமனே 'தனிமனித உழைப்பு' காரணமல்ல; கூட்டுச் செயற்பாட்டினால்தான் இந்த அறுவடை சாத்தியமாகியுள்ளது!

விளம்பரங்கள் சேகரித்துதவியும், பிரதிகள் விநியோகித்தும், அறிமுகக் கூட்டங்கள் ஒழுங்குசெய்தும், ஆலோசனைகளை முன்வைத்தும், ஆக்கங்களைத் தந்தும் இக்கூட்டுச்செயற்பாட்டில் இணைந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு, நம்பிக்கையுடன்–

இரண்டாம் ஆண்டில், 'கவிதை' காலடி பதிக்கிறது!

– ஆசிரியர் ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டாளிப் பெருங்கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்!

□□ ஜெ. கி. ஜெயசீலன் □□

"பாடுவது ஒன்று; நாடுவது வேறொன்று" என்கிற செயற்பாடில்லாத - பாடுவதும் ஒன்றே; நாடுவதும் ஒன்றே எனும் இலட்சிய நடைமுறைக் கவிஞர் வரிசையிலே பாரதியார், பாரதிதாசன் இருவருக்கும் பின் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமே "பளிச்" சென்று தெரிகிறான். நேர்மை, நெஞ்சுறுதி, இலட்சிய தாகம், மானுடநேயம் ஆகியவற்றை மூலாதாரங்களாகக் கொண்டு, அவனது கவிதாசக்தி வெளிப்பட்டது. அடிமட்ட மக்களுடன் ஒருவனாக, அடிபட்டு அடிபட்டு வாழ்ந்த அவனது பாடல்களில் எல்லாம், உழைக்கும் வர்க்கத்தின் உதிரத்துடிப்பே அடிநாதமாக ஓங்கி ஒலிக்கும்!

"திட்டம் போட்டுத் திருடற கூட்டம்
திருடிக் கொண்டே இருக்குது! - அதைச்
சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம்
தடுத்துக் கொண்டே இருக்குது!"

என அவன் பாடுவது, சாதாரண சாமான்யத் திருடர்களை அல்ல; சமுதாயத்தையே சுரண்டி விழுங்குகிற உழைப்புத் திருடர்களைத்தான்! ஒருமுறை, அவன் பாடல்கள் எழுதிய திரைப்படத்தின் தயாரிப்பாளரான கல்யாணராமஐயர் என்பவர், பாடல்களுக்குரிய ஊதியத்தொகையை அவனுக்கு வழங்காமல் நீண்டநாட்கள் இழுத்தடித்தார். கவிஞனும் பொறுத்துப் பார்த்தான்; முடியவில்லை. ஒரு நாள், அந்தப் பட முதலாளி உள்ளே இருந்துகொண்டே ஆளைக் காத்திருக்கும்படி, ஏவலாளனை விட்டுச் சொல்லச் செய்தான். பட்டுக்கோட்டையான் வெகுண்டெழுந்து, அந்த இடத்தில் வைத்தே ஒரு சிறு காகிதத்தில்,

"தாயாற் பிறந்தேன்; தமிழால் அறிவு பெற்றேன்!
நாயே! நேற்றுன்னை நடுத்தெருவிற் சந்தித்தேன்!
நீயார் என்னை நில்லென்று சொல்வதற்கு?"

என்று, கனல் பறக்கும் கவிதையை எழுதி, ஏவலாளனிடமே கொடுத்து, பட முதலாளியிடம் கிடைக்கச் செய்தான். பயந்துபோன அந்தப் பழைய பண்டாரம், அறம்பாடிவிட்டானே கவிஞன் என, அலறியடித்துக் கொண்டோடிவந்து பணத்தைக் கொடுத்தான் பட்டுக்கோட்டையானிடம்! தன்னுடைய உழைப்பை எவராவது உதாசீனப்படுத்தியபோது, அவன் உறுமிக்கொண்டு அவர்மீது பாயத் தவறியதே இல்லை. அதே போல, மற்றைய உழைப்பாளிகளுக்காகவும் கவிதைகளாலே உரிமை முழக்கமிட்ட நற்பண்பு அவனுடையது. உடலுழைப்பு, மூளையுழைப்பு இரண்டையுமே செய்வன திருந்தச் செய்த அந்தப் பாட்டாளிப் பெருங்கவிஞன், தான் வாழ்ந்து முடித்த இருபத்தொன்பதே வயதுக்குள், பதினேழு வகையான தொழில்களைச் செய்துபோன சாதனையாளன்! பட்டாணிச் சுண்டல், பழவகை வியாபாரத்திலிருந்து, படவுலகப் பாட்டெழுதும் தொழில்வரை அவனது உழைப்பு பரிணாமவளர்ச்சி கண்டுள்ளது. அதனால்தான்,

"செய்யுந் தொழிலே தெய்வம்! - அந்தத்
திறமைதான் நமது செல்வம்!
கையும் காலும்தான் உதவி! - கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி!"

என, திடசங்கற்பம் செய்து, கவிதை பாடினான்.

முதலாளித்துவக் கொடுமைகள் ஒருபோதும் தானாகத் தீரப்போவதே இல்லை. அவற்றை, எதிர்த்துப் போராடித்தான் தீர்த்துக்கட்ட வேண்டுமென்பதை,

"தனியுடமைக் கொடுமைகள் தீரத்
தொண்டு செய்யடா! - அட!
தானாய் எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா!"

என்கிற பாடல்வரிகளின்மூலம் திடமாக வலியுறுத்துகிறான். "தானாய் எல்லாம் மாறும்" எனும் மூடவாசகத்தைப் "பழைய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்'' என்பதன் வாயிலாக, அது நீண்டநெடுங் காலமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் பொய்வாசகம் என, மிக நயமாகச் சுட்டிக் காட்டிவிடுகிறான் கல்யாணசுந்தரம்! அந்தப் பழைய பொய்யை, அன்றைய பொய்யர்களும், இன்றைய பொய்யர்களும் இன்னுங்கூடப் பிரயோகித்துவரும் பேருலகில்,

''சின்னப்பயலே! சின்னப்பயலே! சேதி கேளடா!-நான்
சொல்லப் போற வார்த்தையை நல்லா எண்ணிப்
பாரடா!''

எனும் அந்தப்பாட்டுக்கு, இன்றைக்கும் என்றைக்கும் மிக மிக அவசியத் தேவை இருக்கும் என்றே தோன்றுகிறது. அதையெல்லாம் அவன் முற்றும் உணர்ந்தபடியால்தானோ,

''சொல்லுறதைச் சொல்லிப் புட்டேன்!
செய்யுறதைச் செஞ்சிடுங்க!
நல்லதுன்னா கேட்டிடுங்க!
கெட்டதுன்னா விட்டிடுங்க!

எனப் பாடிவிட்டு, அதே பாடலின் நிறைவுச் சரணத்தில்,

'' சித்தரொடு, யோகிகளும்
சிந்தனையில் ஞானிகளும்,
புத்தரொடு, ஏசுவும்
உத்தமர் காந்தியும்,
எத்தனையோ உண்மைகளை
எழுதி, எழுதி வைச்சாங்க!
எல்லாம்தான் படிச்சீங்க!
என்ன பண்ணிக் கிழிச்சீங்க?''

என்கிற, கோபாவேசக் கேள்வியுடன் பாட்டை முடித்திருக்கிறான் போலும்! எங்கே? இந்தப்பாடலை முழுவதுமாகப் பாடிக்கொண்டு வாருங்கள் பார்க்கலாம். கடைசிவரியை முடிக்கும்போது, அந்த வார்த்தைகளின் சீற்றத்தொனி உங்களைக் கிழித்து விடுவதை உணரவில்லையா?! ''என்ன பண்ணிக் கிழிச்சீங்க?'' எனும் வினாப்பதத்தை எத்தனையோ இடங்களில், எத்தனையோ முறை கேள்விப்பட்டிருந்தாலும் கூட, அவை அத்தனைக்கும் இல்லவே இல்லாத அர்த்தப் பெருஞ்செறிவும், ஓங்கி அறைந்துவிடுவதைப் போன்ற கோபவீச்சும், பட்டுக்கோட்டையாரின் இந்தப் பாடலிலுள்ள அந்த வார்த்தைகளுக்குள் மட்டுமே பொதிந்திருக்கின்றன.



வாழ்க்கையை அப்படியே வார்த்தைகளாக்கிக் கவிதை பாடிய அவன், உழைத்துப் பிழைப்பவரின் உரிமைப்போர் வென்றிட, உரத்துக் கூவிய சிவப்புக் குயில்! வறுமையை வார்த்தை வடிவத்தில் மட்டுமல்லாது, வாழ்க்கை வடிவத்திலும் தரிசித்த அக்கவிஞன்,

''தேனாறு பாயுது! செங்கதிர் சாயுது!
ஆனாலும் மக்கள் வயிறு காயுது!''

எனப் பாடும்போது, பசி, 'பட்டினியின் விஸ்வரூபம், பாடல் வரிகளினூடாகப் படிப்பவரதும், கேட்பவரதும் நெஞ்சங்களை ஊடுருவித் தைக்கிறது. கல்யாணப்பரிசு என்கிற திரைப்படத்தில் இடம்பெற்ற அவனது பாடல்களின்மூலம், தமிழர்கள் எல்லாருக்குமே பரிச்சயமானவனாக மிகப் பிரபலம் பெற்ற அவன்,

'' தூங்காதே தம்பி! தூங்காதே! - நீ
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!''

என்று பாடி, உழைக்காமல் உறங்கிக்கொண்டிருந்த உலுத்தரைத் துயிலெழுப்புவதற்காக, இரவு பகல் பாராமல் விழித்திருந்து உழைத்ததனால், இருபத்தொன்பதாவது வயதில் அவனே இறுதித்தூக்கம் கொண்டதுதான், நெஞ்சைப் பிழிந்தெடுக்கும் நிரந்தர சோகம்!

'' குட்டிஆடு தப்பி வந்தா, குள்ளநரிக்குச் சொந்தம்!
குள்ளநரி தப்பிவந்தா, குறவனுக்குச் சொந்தம்!
தட்டுக் கெட்ட மனிதர் கண்ணிற்
பட்டதெல்லாம் சொந்தம்!
சட்டப்படி பார்க்கப் போனா எட்டடிதான் சொந்தம்!''

என்று சொன்ன அந்த ஆறடி மனிதன், ஆறடி நீள நிலத்துக்குள் அடங்கிவிட்ட போதும், அவன் எழுதிய பெருவாரியான பாடல்களின்மூலமாக,

''உண்மை ஒருநாள் வெளியாகும்! - அதில்
உள்ளங்கள் யாவும் தெளிவாகும்!
பொறுமை ஒருநாள் புலியாகும்! - அதற்குப்
பொய்யும், புரட்டும் பலியாகும்!''

என்பதை நெஞ்சார நம்பி, அசையாத உறுதியுடன் வெற்றி நடை போட்டு, அந்தப் பாட்டாளிக் கவிஞனை ஆராதிப்போம். ✱



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்

## முருகையன்

உலாவ என்று புறப்பட்டேன் -
ஒரு நாள் அந்தி வேளையிலே
ஊரின் கரையில் - புறம்போக்காய் -
உள்ள பரந்த திறந்த வெளி,
அலைகள் எறியும் மெல்லோசை,
ஆட்கள் 'பறையும்' கதை ஒலிகள்
ஆனால், அவையோ பெருங்காற்றில்
கலந்து, கரைந்து போய் மறையும்
பல வேறு நிறப் பூந்துகில்கள் -
பச்சை, சிவப்பு, மஞ்சல் என......
பார்த்த திசைகள் எவ்விடத்தும்
பளிச்சென் றடிக்கும் வெளிச்சங்கள்
மலரின் மணங்கள் இடையிடையே
வந்து மூக்கைத் தடவுகையில்
வார்த்தை கிளம்பித் தடுமாற
மனமோ பறவை ஆகிறது.



உள்ளே நிகழ்ந்த கிளுகிளுப்பில்
ஓராயிரம் பண் ஒருங்கெழுந்தே
ஒன்றோடொன்று குழைகையிலே
உச்சத் தொனியில்
பாட்டொன்று
தள்ளி உதடு திறந்துவிட,
தாங்கா உணர்வு மயக்கினிலே
சத்தம் இடவும் துணிகின்றேன்.
சனங்கள் கேட்டால்......
என்ன தான் சொல்ல மாட்டார்கள்!
மெள்ள அடங்கி, இசை எழுப்பும்
விருப்பை முடக்கி வைக்கின்றேன்.
மிகவும் முரட்டுக் குரல் எனக்கு;
வீணை பயின்றும் அறியேனே!
தெள்ளு தமிழ்ச்சொற் பேச்சோசை



தேடித் தெரிந்து விளையாடும்
சிறிய பழக்கம் மட்டுந்தான்
சில நாள் முயன்று வருகின்றேன்.

பாட்டாய்ப் பண்ணிற் கலந்து விடும்
பழைய பாணர் போலன்றி,
பச்சைப் பசிய தமிழ்ப் பேச்சின்
பண்புக் குழையற் கலை அமைத்தே
ஏட்டால் உலகு பயன் அடைய
எடுக்கலாமே சில பணிகள்!
எண்ணப் பின்னல் இழைவுகளாய்
யானே மாறி விட்லாமே!
கூட்டாய் என்னுள் பிறப்பெடுத்துக்
குமிழி எழுப்பும் உணர்வுகளைக்
குழைத்துப் புதிய வடிவுடைய
குளிர்மை உருவம் தரலாமே
- நீட்டாய் எனது நினைப்புகளோ
நெஞ்சில் வளர......
வாய் அசைய......
நிகழ்ந்த பேச்சின் ஓசைகளோ
நேராய் வெளியில் வருவனவாம்.
வந்த ஓசை
தனிமையிலே வளர்ந்து பரவ
நடக்கின்றேன்.
மற்றும் சில பேர் எனைக் கண்டு
மனத்துட் சிரித்துப் போகின்றார்.
ஐந்து நண்பர் மாத்திரமே
ஆசையோடு பாராட்டி
அருகே துணையாய் நடக்கின்றார்.
அவரும் என் போல் பேசுகிறார்,
பிந்தி வானம் கறுப்பாக,
பேசினோரும் பிரிகின்றார்.
பிற சோலிகளைப் பார்ப்பதற்காய்ப்
பிரிந்த அவர்கள் திரிகின்றார்.

சொந்த வழியில் நடக்கின்றேன்
தொடர்ந்து வருவார் புது நண்பர்.

சூழல் மேலும் கறுத்தாலும்
சொற்கள் மின்னும்;
சுடர் விரியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்பதற்காய் எழுதுகிறேன்!

நீலாவணன்



சினிமாவின் விளம்பரங்கள்
செறிந்திலங்கும் ஒரு சின்ன மூலைக்குள்ளே ...—
எனையும் ஒரு பொருட்டாக்கி
இடம்பிடித்துக் கொண்டிருக்கும் புதிய செய்தி!
தனது 'சுவீப்' 'நம்பர்'களும்
கிடப்பனவோ.....? என்றரவு...... புள்ளியாகத்
தினசரியைத் தினம்படிக்கும்
எங்கள்ஐயர் கண்களுக்குத் தெரியும் செய்தி!

சலூன்கடையில் இருந்ததனைச்
சததமிட்டும் வாசிப்பார்! சலிப்பார்! 'ஆளை,
விளங்கிறதோ......?நம்முடைய
விசர்ச்சினைத் துரைமாஸ்ரர் பற்றி; இந்த
இலங்கை-சிலோன் .... பேர் பெற்ற
பேப்பரிலே எழுதியுள்ளான்...... எவனோ ஊரான்;
எலும்பாக ..... இது வழியே
திரிந்தாலும்..... ஆள்பெரிய எழுத்தாளன் ஓய்!"
என்று சொல்வார்; அதைக்கேட்ட
எங்களுர் இளந்தாரி மார்கள் சேர்ந்து,
ஒன்றுபட்டும் இரங்குதற்காய்
ஒருபெரிய பொதுக்கூட்டம் ஒழுங்குசெய்வார்
கண்டுவிட்டுப் போகாமல்......
கண்மூடி விட்டானே மடையன்! என்று
ஒன்றும் விடா தென் படைப்பின்
மேட்டிமைகள் ஒவ்வொன்றாய் உடைப்பார்! உண்மை!

என்பதற்காய் எழுதுகிறேன்!
இதுவன்றோ கலைபெற்ற பெரிய பேறு!
கண்டிதனைப் பொறுக்காது......
கைலையிலே பார்வதியைக் கணவனோடு
கண்டதொரு தாழம்பூக்
கதையாக ..... கலையாழிக் கரைகண் டார்போல்
பண்டிதர்கள் பகர்வதெல்லாம்......
காழ்ப்பு! அவர்தம் கட்சிமனப் பான்மைகாணும்! ✻

* நீலாவணனின் இயற்பெயர் சின்னத்துரை; இக்கவிதை இதுவரை பிரசுரிக்கப்படாததென்பது குறிப்பிடத் தக்கது.

## கண்ணில் தெரியுது வானம்

பழநிபாரதி



'...உன்னால் இன்று
கால்களில் காயம்பட்ட
எம் சூரியன்
நாளை
சிறகுகளோடு வரும்...

...நாற்புறமும்
அலைகள் வேலியிட
நிலம்
தீவாகலாம்.
உன் ஆயுதங்களால்
எட்டுத் திசைகளை வளைத்தாலும்
'விடுதலை'
தீவாகாது
ஒரு நாளும்...

குண்டு வீசும் உன்
விமானங்களுக்கு மேலே
அது சிறகடிக்கும்.

பீரங்கி தாங்கிய உன்
கப்பல்களுக்குக் கீழே
அது நீந்திக் கொண்டிருக்கும்.

...விஷம் ஊறும்
மார்பகங்களோடு
தாய்மைப் பாசம் காட்டும்
உனது அரசியலில் -
பொய்மையின்
முந்தானைகளாய்
உயரும்
தேசியக் கொடிகள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.. இருபத்தொரு
குண்டுகள் முழங்கி
அந்நிய நாட்டு
விருந்தாளிகளை வரவேற்கும் உன்
துப்பாக்கிகள்
சொந்த நாட்டில்
நியாயம் கேட்பவனின்
சடலம் சுமப்பதோ உன்
செங்கோன்மை? ❊

*கவிதையின் சில பகுதிகளே தரப்பட்டுள்ளன.

நன்றி: வெளிநடப்பு
(1988)

## 'பள்ளி' எழுச்சி

**நாக. சிவசிதம்பரம்**

'பள்ளிப் பொறி'யின்
பல்லிடையில் சிக்குண்டு- ஓர்
சொல்லும் வெளி அதிராச்
'சோதனை'யின் சூழலில் - என்
நெஞ்சினில் கால் வைத்து
"நிலவு போல் சிரி" என்றார்.

'இரை' தேடிச் சென்றே - நான்
இரையான அவமதிப்பில்......
'உளி'யால் விறகுடைத்த
உள்ளக் கொதிப்பில்......
இலைகளும் அசையாது
இறுகிய பொழுதுகளில்
தனியென வெந்துயரில்
தடுக்கிற்று எனது நடை.....

ஓடிவந்து என்னுள்
உயிர்ப்பாய் மிக இயங்கத்
தூண்டும் மனிதர் முகம்
தெரிய நினைவுற்றேன்;
சோர்வாய் - ஓய்ந்து - இனியும்
சுருண்டு கிடவாமல்
ஏவிறறு மனம் - துடித்து
'எழு' என்று! ❊



## பேய்தின்ற பழங்கள்

**கருணாகரன்**



அந்த மழைநாளைப் போல
இன்றைக்கு இல்லைத்தான்
இன்றும் மழை குதித்தோடுகிறது பரந்து.. சிதறி.....
திக்கெல்லாம் பரந்து
அன்றைக்கும் மழை குதித்துக் குதித்தே ஓடியது.
அன்று .....
நானும் நீயும் மனம் கவ்விக்கிடந்தோம்.
அது என்ன மகிமைக்காலமா ?
பிணைந்து பிணைந்து இரண்டு பட்சிகள்போல
மனம் பொருத்திக் கலந்தோமே!
நாங்கள் புரண்ட தரையெல்லாம்
வாசனை பரவி வளர்கிறது என்று புன்னகைத்தோம்
நம் பற்களின் வஸீகரத்தில்
ஐநூற்று நாற்பது கோடி மனிதரும்
வாலாயப்பட்டனர் என்றிருந்தோம்,
பிறகு,
யாரோ அசுரன் எனக்குள்ளே புகுந்துள்ளானென்று
ஒருநாள் நீ கர்ஜித்தாய்.
நான் மறுத்தேன்;
உன் கத்தலை வழிமறித்துக் கோட்டை எழுப்பினேன்.
உன் மனப்பழத்தைப் பேய்தின்று போயிற்றென்று தவித்தேன்.
பாவங்களின் ரேகைகளில் உன்பலன்
சிக்குண்டு போயிற்றென்று நீ துயருற்றாய்.

இருட் காலம் மூடிற்று.
நமக்குள்ளே கூரொளிரும் வாள்விழுந்து
திசை ரண்டாகிப் போனோம்.
அப்போது,
முன்வளவுப் பிறைசூடிப் பூமரம்
கண்விழுத்திக் கதறியது நமைக்கண்டு.
புலன்மயங்கி வாடியது புறாக்கண்ணி
தெருவாகை நிழல்கூட நொந்ததல்லவா ?
மழைஈரம் வற்றிக் கோடைப்புழுதி
தெருவெல்லாம் மூடியது·



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி வண்ணத்துப் பூச்சிகளை
ஞாபகங் கொள்வதெங்ஙனம் ?
ஒரு பூக்குஞ்சாக இருந்த உன்முகமும்
தலையின் பின்புறம்
ஒளிவட்டம் சுழலுதென்று நீசொன்ன என்முகமும்
நம் கால்களில் மிதிபட்டுச் செத்தன.
சாக்காட்டின் இராக்குரலில்
நம் உறவு பகைபிடித்துக் கிடப்பதாக
சரித்திரம் சொல்கிறதாகச் சொல்கிறார்கள் எல்லோரும்! ✻

## மாரடைப்புக்குள்ளான மக்களாட்சி!

ஜெ. கி. ஜெயசீலன்

தேச ஆடுகளின் தேகங்கள் நனைவதுவாய்
ஆதிக்க ஓநாய்கள் "ஆற்றாமல் அழுதுவரும்"
காட்சியின் "மேன்மை"யினைக்
கண்டு மனம் சிலிர்க்கிறது!

அடக்குமுறைச் சிலுவையிலே
அறைந்து சுரண்டிவிட,
ஆவலுடன் நாடுதேடும்
அமெரிக்க ஓநாயோ,
"நீதி"க்குக் காவலன்போல் "நியாயத் தராசேந்தி,"
பாதிக்கப்பட்டிருக்கும் 'பரிதாப ஆடுகளை'
ஒப்பந்த வேட்டைகளால் ஒவ்வொன்றாய் விழுங்கிவிடும்
பகிரங்கப் பகற்கொள்ளை பக்குவமாய் நடக்கிறது!
அட ஆசைவெறி யாரைவிடும்?
ஆதிக்க மமதையினால் ஓர் 'ஆசிய ஓநாயும்'
அகல வாய் திறக்கிறது! - தான்
வீசிவரும் சதிவலையில் வீழாதோ "மீன்கள்" என,
ஆசிய ஓநாய் ஒன்றும் அகலவாய் திறக்கிறது! - உலகில்
கூப்பிய கரங்களுடன் "குடியாட்சி" சிறக்கிறது!!" ✻



ஆதியில் இசையும் மொழியும் இணைந்து தோன்றியது கவிதை; சாமானிய நிலையிலிருந்து வளர்ந்து வளர்ந்துமொழியின் உயர் வடிவமாகப் பரிமாணமடைந்து சர்வவியாபகமுள்ளதாக இன்று திகழ்கிறது. கவிதை பற்றிப் பலர் பலவிதமாக வரைவுகளைக் கூறிநிற்பர். குறுகியும் ஆழ்ந்தும் விரிந்து பரந்த தன்மையையும் தன்னுள் புதைத்துக்கொண்ட நுண்கலைப் பெட்டகம் கவிதை எனலாம். கவிதை என்ற இப் பெட்டகத்தினுள் அகவல், ஆசிரியப்பாமுதல் கலிப்பா, வெண்பா வரை பலவகைப் பிரிவுகளைக் காணலாம். இப்படியான பல பகுப்புகளோடு ஆனந்தக் களிப்பு, சிந்து, திருப்புகழ், தெம்மாங்கு, அந்தாதி, பிரபந்தம், சீட்டுக்கவி, நலுங்கு, தாலாட்டு, அம்மானை, கும்மி, அங்கதம் எனப்பலவகைப் பாவினங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளது. எல்லாப் பிரிவுகளும் பகுப்புகளும் கவிதை என்ற ஒரே பெட்டகத்துள் அடங்கினா

## அங்கதச்சுவைக் கவிதை அன்றும் இன்றும்

வளவை வளவன்

லும், சுவையில் வெவ்வேறானவை என்பதைப் படித்துணர்வோர் புரிவர். ஒவ்வொரு வகையினமும் அவ்வவ் வினத்திற்கான சுவையினைப் புலப்படுத்தி நின்ற போதிலும் எல்லா வகையினங்களினின்றும் அங்கதம் வேறுபட்டு நிற்பதை உணரமுடியும்.

அங்கதம் என்பது வசைக்கவி எனவும் அழைக்கப்படும். புகழ்வது போல இகழ்தல் -போற்றுவது போலத் தூற்றுதல், தூற்றுவது போலப் போற்றுவது என இது எதிர்மறை நிலையையே கொண்டிருக்கும் - சுவையில் பெருமளவிற்கு நகைச்சுவையைத் தாங்கி நிற்பது. நாகரிகமாகவும், நாசூக்காகவும் பலவித அர்த்தங்களையும் சொல்லக்கூடிய உள்ளடக்கத்தைக் கொண்டதாகவும் இருக்கும். இத்துறையில் பாடி வென்றவர்கள் மிகச்சிலரே. பழம் புலவர் வரிசையில் ஔவையார், அந்தகக்கவி வீரராகவ முதலியார், காளமேகப்புலவர் போன்றோர் அங்கதச் சுவையில் பாடியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும், ''வசைபாடக் காளமேகம்'' எனும் கவிதா வரியால் அறியப்படுபவர் காளமேகப்புலவர் ஒருவரேயாவர். இவரது கவிதைகளிற் பெரும்பாலானவை அங்கதச்சுவை சொட்டித் தித்திக்க வைப்பவை. வஞ்சப் புகழ்ச்சியாகப் பாடுவதில் கைதேர்ந்த சொல்லாட்சியில் சுவை ஏற்றித்தரும் இவர் கவிதைகளில் கடவுள்களைக்கூட விட்டுவைக்கவில்லை.

''வாதக்காலாந் தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப் பெருவயிறாம் பிள்ளைதனக்கு - ஓதக்கேள்
வந்தவினைதீர்க்க வகையறியார் வேளூரார்
எந்த வினை தீர்ப்பார் இவர்''

என்ற பாடலில் சிவனின் தூக்கிய காலை வாதக்காலென்றும், அவரது மைத்துனன் கிருஷ்ணனுக்கு (கடல் மேல் கிடப்பதால்) நீரிழிவுநோயாளி என்றும், மகன் விநாயகருக்கு பெருத்த பேழை (பாண்டுநோய்) வயிறு என்றும் கூறி, இத்தனை நோயாளிகளின் நோயையும் தீர்க்க முடியாத வேளூருறையும் சிவன், எந்த நோயைத் தீர்க்கப் போகிறார் என, மிக்க கிண்டலாகச் சாடுவது எத்தனை நளினச்சுவை மிகுந்தது! இப்படிப் பல பாடல்களில் அவரது அங்கதச் சுவை வெளிப்பட்டு நிற்கின்றது.

கவிச்சக்கரவர்த்தி கம்பரோடு, கவிமடந்தையான ஔவையார் ஒருதடவை ஒருநிலையில் முரண்பட்டுக்கொண்டார். ஔவையாரைக் கண்ட கம்பர், ''ஒற்றைக்கால் நாலிலைப் பந்தலடி'' என்று கூறி நகைத்தாராம். உட்பொருளை உணர்ந்த ஔவையார் கம்பருக்கு பாட்டாலே பதில் சொன்னார்.

''எட்டுக்கால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமுட்டக்
கூரையில்லா வீடே குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அது''

என்று, 'எடி' என்று முடித்த கம்பருக்கு 'எடா' என்று விழித்து முடித்துவைத்தார். இப்பாடல் (சிலேடை என்றும் சொல்வர்) ஆழ்ந்த புலமையினுள் தோய்ந்து தமிழ் இலக்கமுறையாலும் காப்பியப் பாத்திரங்களோடும் கடவுளோடும் பின்னப்பட்டு பரந்து நின்று கேலி செய்கின்றது. தமிழில் எட்டைக் குறிப்பது ''அ'', கால் பாகத்தைக் குறிப்பது ''வ''; எனவே அவ



லட்சணமே, எமன் ஏறிவரும் எருமை மாடே, கழுதையே (பெரியம்மை வாகனம்) தலை இல்லாத (கூரை இங்கு தலைக்கு ஒப்பாக நிற்கிறது) முண்டமே, ராமனின் தூதுவனான குரங்கே ஆரைப்பார்த்தடா சொன்னாய் என்று முடித்தலில் கவிச்சுவையும், அங்கதச்சுவையும் ஆவேசக்கிண்டலோடு நிற்பது சுவை தருவதன்றோ!

தனிப்பாடல் திரட்டு நூலிலுள்ள இன்னொரு அங்கதச் சுவைக் கவிதையைப் பார்ப்போம். நாகபட்டினத்துத் தாசி ஒருத்தி ஒருநாள், குரல்வளமில்லாத நிலையிலும் தன்னை மறந்து பாடிக்கொண்டிருந்தாளாம். தனது கழுதையை முதல் நாளிலிருந்து காணாது அலைந்த சலவைத் தொழிலாளி ஒருவன் இந்தப் பாடலைக் கேட்டு ''கண்டேன் கண்டேன் எனது கழுதையை'' என்றவாறு மகிழ்ந்து. கயிற்றோடு ஓடினதாகக் கூறப்பட்டுள்ளது. பாடல் இதுதான் -

''வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள் - நேற்றுக்
கழுதை கெட்ட வண்ணான் கண்டேன் கண்டேனென்று
பழுதை எடுத் தோடினான் பார்.''

இங்கு அங்கதச்சுவை எப்படி இருக்கிறது பார்த்தீர்களா! இப்படிப் பல கவிதைகள் பழம் புலவர்தம் அங்கதச்சுவைப் புலப்பாடாகக் கவியுலகில் நிலவுவதைக் காணலாம்.

அன்றைய புலவர்களின் இந்த அங்கதச் சுவையானது, அன்றைய சமூக அமைவுக்கேற்ப வெற்றுச் சிரிப்பிற்கும் புலமைத் திறன் வெளிப்பாட்டிற்குமாக வெளிப்பட்டுள்ளமை தெளிவு. ஆனால் இன்றைய தற்காலக் கவிஞர்களின் அங்கதச்சுவையால் ஆணித்தரமான பல நல்ல கருத்துக்கள் வெளிப்படுவதைக் காணலாம்- இதை ஒரு கால வேறுபாட்டின் பயனாகக் கொள்ளலாம். இத்தகு பயன்மிகும் அங்கதச்சுவைக் கவிதைகளைக் குறும்பா என்றமகுடத்தோடு தந்து சென்றவர் மஹாகவி அவர்கள். தற்காலக் கவிஞர்கள் செய்யாத பல நல்ல புதிய முயற்சிகளைத் தமிழ்க் கவிதை உலகிற்குத் தந்துசென்றவரும் மஹாகவியே என, துணிந்து கூறலாம்.

மஹாகவியின் அங்கதச்சுவை அவரது 'குறும்பா' நூலில் உள்ள நூறு பாக்களில், சமூகப் பிரக்ஞையோடு கேலியும் கிண்டலுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதைக் காணலாம். நம் அன்றாட நடைமுறை வாழ்வில் கைலஞ்சம் எத்தனை சக்தி வாய்ந்ததாகத் திகழ்ந்து பல கேடு களை விளைவிக்கின்றது என்பதை வெளிப்படுத்த முனைந்து,

''முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி வந்தவனின்
கைத்தலக்திற் பத்து முத்தைப்
பொத்திவைத்தான் - போனான் முச்சூலன்''

என்பதில், தர்மதேவனான எமதர்மனே கைலஞ்சம் பெற்றுத் தன் கடமையைத் தவறவிடுதல்மூலம் - இச்சமூகத்தில் வேரோடி விட்ட கைலஞ்சத்தை நையாண்டியாகக் காட்டுகிறார். சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்திச் செய்யும் கலாசாரச் சீரழிவுகளைச் சித்திரிக்கும் இன்னொரு பாடல்,

தென்னைமரம் ஏறுகிறான் சித்தன்
இன்ன கண்டான் அவ்வழகுப் பித்தன்
தன்னுடையை மாற்றுகிறாள்
கிணற்றடியில் தங்கம்மாள்

இன்னும் இறங்கானாம் அவ்வெத்தன்.''

ஓசைநயத்தோடும், அர்த்தபூர்வமான நகைச்சுவையோடும் சமூக யதார்த்தத்தை அப்படியே படம் பிடித்து வைத்துள்ளார். வல்லரசுப் போட்டிகளால் அணுவாயுதச் செயற்பாடுகளும், அவற்றால் தோன்றும் கொடிய நோய்களினதும்கொடுமையைச் சிந்திக்க ஒரு பாடல்,

''வல்லரசின் செய்கையினைக் கண்டு
வல்லரசு வீசியதோர் குண்டு
நல்லபடி நம்மனிதர்
நச்சரிப்புத் தீர்ந்து விடத்
தொல்லுலகை ஆள்கிறது நண்டு.''

[ஹிரோசிமா,நாகசாகிக் குண்டு வீச்சுக்குப் பின் அங்கு மோசமான கொடிய நோய்கள் தோன்றி மக்களை வருத்தும் நிலையின் தாக்கமே இக்கவிதை.]

அங்கதச்சுவையில் மஹாகவியின் குறும்பாக்கள்,மிகவும் அர்த்தச் செறிவுடனும் அறிவியல் வீச்சுடனும் எளிமைப்படுத்தப்பட்டு நிமிர்ந்து நிற்பதைக் காணலாம்.

கவிதா உலகில் சுவைப்பதற்கும் வித்துவச் செருக்கிற்கும் மட்டுமே உரியதானதாக அமைந்த அன்றைய அங்கதச்சுவைக் கவிதைகளின் போக்கில் பெரும் மாற்றங்களைப் புகுத்திச் சமூகப் பார்வையுள்ள குறும்பாக்களாக மாற்றி அமைத்ததில், 'மஹாகவி' சாலத்தை வென்று நிற்கின்றார். அவரது 'குறும்பா நூறு' இதற்கான சான்று. இத்தகைய அங்கதச்சுவை மிக்க கவிதைகளைப் படைப்பவர் இன்று குறைந்தாலும், இன்றைய கவிஞன் ஒருவன் அங்கதச் சுவைக்குச் சமூகப்பார்வை அந்தஸ்தைக் கொடுத்து உயர்த்தியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

அங்கதச்சுவைப் பாடல்கள் சிலவற்றை,புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதையிலும் காணலாம். பதவிகளில் அமர்வோரின் கெடுபிடிகள், அரசியல்வாதிகளால் வரும் மாற்றங்கள் என்பவற்றிடையே நிகழும் விகற்பங்களை 'உலகப்பன் பாட்டு' என்ற பாடலில் இப்படிப் பாடுகிறார்:

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ''

'ஓடப்பர் உயரப்பர் ஒப்பப்பர்...' என்று வார்த்தை ஜாலங்களால் அங்கதச்சுவையை மீட்டிவிடுகிறார். படிக்கப்படிக்க கவிதை இன்பச் சுவைகூட்டும் அங்கதக் கவிதைகள் காலத்திற்கேற்ப மாற்ற மடைந்தாலும், சுவையில் எள்ளலும் கிள்ளலுமாக - கேலியும் கிண்டலுமாக நம் மனங்களை ஆள்வது சிந்திக்கத்தக்கதே!

## கைவீசம்மா!

**தி. உதயசூரியன்**



கைவீசம்மா கைவீசு
கடமை முடிக்கலாம் கைவீசு
உரிமை கேட்கலாம் கைவீசு
உணர்வுடன் எழலாம் கைவீசு

போராளி ஆகலாம் கைவீசு
போரிட எழலாம் கைவீசு
மண்ணை மீட்கலாம் கைவீசு
மாவீரன் ஆகலாம் கைவீசு

தாயகம் மலரட்டும் கைவீசு
தமிழும் வாழ்த்தட்டும் கைவீசு
தாகம் தணியட்டும் கைவீசு
தரணி போற்றட்டும் கைவீசு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கத்து வீட்டுக் கடுவன் பூனைக்குட்டி !

## கல்வயல் வே. குமாரசாமி

"பால்புழக்கம் உள்ள இடம்; பூனை; கவனமடி
கால்தடக்கிப் போட்டாலும்
கைதவறிவிட்டாலும்
நட்டம் நமக்குத்தான்"
நாளாந்தம் அம்மாவின் சட்ட விளக்கம்
நுணுக்கம் புரிந்ததுபோல்
வெட்டும் ஒருமின்னல் நினைவில் பளிச்சென்று
ஓட்டிலே சாய்ந்து
வடிவாகக் கால்நீட்டி உட்கார்ந்திருக்கையிலே
ஊரில் நடக்கின்ற
கட்டுப்பாடற்ற சில ஊர்த்துழவாரங்கள்
முற்றுகையிட்டு முழிபிதுங்க வைக்கும்
இவைபற்றி மனமாடு அசைபோடும்
பழசுகளை.

*        *

பக்கத்து வீட்டுக் கடுவன் பூனைக்குட்டி.

*        *

வடிவெண்டால்!
கண்டால் பிடிச்சு அளையச் சொல்லும்.
விடிவிடியக் காலுக்கை வந்து
உரஞ்சி நிற்கும்.
பொடியளுக்கும் ஆசை;
நெடுக எங்கள் வீட்டிலைதான்.
நொட்டு, நொறுக்கு, பலகாரம் கண்டுதோ
கட்டாயம் வைச்சாகவேணும்
கலைக்கேலா
வந்து போகட்டும்
வடிவும்;
எலி, அணிலும் தொந்தரவு செய்யாது
சோலி குறைவெண்டு
நானும் என்ரை பாடு.
நடுக்கூடம், சாமி அறை, மீனறுக்கும்வேளை
குசினியெலாம் போய்த் திரியும்.
பக்கத்து வீட்டுக் கடுவன் பூனைக்குட்டி.

*        *

உறிமேலே வைச்ச புது வெண்ணெய் ஒருநாள்
கறிச்சட்டி பின் ஒருநாள்

*        *

கண்ணாலே காணாமல் சொன்னால்
கறுமமெண்டு சொல்லிமனம் துடிச்சேன்.

என்னாலே வந்தவினை எப்படித்தான் சொல்லுவனோ?
சொன்னால் பழிஅழிஞ்சு தூய்மை அடைஞ்சிடுமோ?
அப்பளம் பொங்கப் பொரிச்சு

மறந்துபோய் அப்படியேவிட்டுக்
குளிச்சுத் திரும்பினால்......
" கட்டிலி(லே)லை பூனைக் கடுவன் கிடக்கு" தெண்டு
பெட்டைவந்து சொன்னாள்
" எலிபிடிக்கவாக்கும்" எண்டுவிட்டால்
கடவுளே!
நான்விசரி நம்பினனே
விளையாட்டுப் பூனை வினைமாட்டும் எண்டதெலாம்
அம்மா அநுபவமோ
ஆண்டவனே ஆரறிவார்
அயல்வீட்டு மோசடிக்குக் காவல் இருப்பவர்யார்?
வீட்டுநாயைக்கூடச் சீறி வெருட்டிவிட்டு
ஓட்டுக்கு மேலேறி
வீட்டுள் இறங்கி அது
வேட்டைத் திருவிழா வேள்விகளும் செய்வனென
உச்சி மரமேறி
உறுமி "நகம் தேய்ச்சு வைச்சிருக்கிறேன்" என்று
நீட்டி யதைக் காட்டுகுதே
விளையாட்டுப் பூனை
விறாண்டித் தசைகிழிச்சுப்
பாய்ஞ்சு ஓடி
உச்சி மரம் ஏறி......

*        *

எச்சில் ஒருபக்கம்
என் துயரம் ஓர்பக்கம்
பச்சைப்புண் முன்பு நகம்பட்ட பெருங்காயம்
காயம் வலிஎடுக்க
வாய்விட்டுக் கத்தாமல்
மாயாமல் மாய்ஞ்சு மடியாமல் ஏங்குகிறேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே மருந்து கட்ட?
எந்த மருந்துகட்ட இங்கே இடமிருக்கு
சொல்லுங்கோ இங்கொருக்கால்! ❋

## ஒரு மழைநாளில்...

### மைதிலி அருளையா



பச்சை இலைகளின் மீதுபடர்ந்த
மழைத்துளிகளின் சப்தம்
உன் முத்தத்தை
நினைவுபடுத்தியது
அது ஈரத்துடன், இனிப்பும் நிறைந்தது.
காற்றின் வீச்சில் துளிர்த்த
துளிகளின் அழுத்தத்தில்
புற்சிரிப்புகள் சூழ்ந்து கவிந்தன.
புற்களின் தலைகளில் தேங்கிய
நீர்த்துளிகளில்
தும்பிகள் ஊர்ந்தன.
ஈரிப்பில் சடசடக்கிற
பறவைகளின் ஒலிகளை
உள்வாங்கிக் கொண்டிருக்கிறது
இந்தக் காற்று.
உன்னை எண்ணியே துடித்துக்கொண்டிருக்கிறது
இந்தக் கவிதை......
காகித வெளியில்
மைத்துளிகள் கசிந்தன.
மர நெருக்கத்தில் ஒட்டிக்கொண்டிருந்த
புறாவின் குறுகுறுப்பில்
வசீகரம் மிளிர்ந்தது.
திடீரென......
நானே மழையாய்
நானே வெளியாய்
காட்சியில் பிணைந்தேன்
பரவசம் ஊறித் ததும்பியது —...
என் சிறகுகளோ
நீருண்டு கிளர்ந்தன.
எது உன்னை முதலில் அண்மித்தது?
ஏக்கம் ததும்புகிற
பாடல் வரிகளா......
அல்லது
ஈரம் செறிந்த என் சிறகுகளின்
ஓசை நயங்களா......? ❋
-1990

## வேஷதாரிகள்!

### வளவை வளவன்

தூக்கக் கனவுகள்
ஆக்கந் தராதெனும்
உண்மை அறிவதில்லை
மன
ஏக்கத்தில் வீழ்ந்து பின்
தூக்கத்தில் வீழ்ந்தவர்
மண்ணில் எழுவதில்லை.

காவியம் தன்னிலே
கற்பினை வைப்பவர்
சொற்றிறம் காப்பதில்லை
பட்டி
மன்றங்கள் தன்னிலே
நின்று மொழிபவை
வாழ்வினிற் கொள்வதில்லை.

இலக்கியந் தன்னிலே
புதுமை விரும்புவோர்
புரட்சியை ஏற்பதில்லை
வெற்று
வார்த்தைப் பீரங்கிகள்
காட்டி வலம்வரும்
தீரரை என்ன சொல்ல!

ஏனிந்த மானுடம்
இப்படி வீழ்ந்தது
என்றொரு கேள்வியில்லை -
மேடைப்
பேச்சினில் மானுடத்
துயரை இறைப்பவர்
வாழ்வில் உணர்வதில்லை.

உண்மை எனுமொன்றை
மானுடம் ஏற்றிடின்
ஏன்துயர் இப்புவியில்?
என்றும்
வேடங்கள் தாங்கிடும்
விவேகிகள் தம்நிலை
மண்ணில் நிலைத்ததில்லை! ❋

---

□ □

''நல்ல கவிதையாலே, கவிஞனின் மேதைமை உறுதியாக நின்று நிலவும்; அதனுடைய எழிலையும் உறுதியையும், காலம்கூட அசைக்க முடியாது. அனுபவ உண்மையினின்று வருகின்ற உவமை எழிலால், கவிதை கம்பீரமாக நிற்கிறது. கவிஞன் சிரித்தால், கவிதை சிரிக்கும்; கவிஞன் அழுதால், கவிதையும் கண்ணீர் சிந்தும். இதுவே உண்மைக் கவிதையின் லட்சணம்.''

— வீஹண்டு

□ □

''வார்த்தைக்காக நான் காத்திருப்பதில்லை; வார்த்தையை வருந்தி அழைப்பதுமில்லை; கண்ணீரைப்போல் அழைக்காமல் அதுவாக வரவேண்டும்' காலங்காலமாய் பழகிய கனிவுமிக்க நண்பனொருவன் முன்னறிவிப்பின்றி வருவது போல் எதிர்பார்க்கும் பக்கங்கள் தோறும் எதிர்பாராமல் வரவேண்டும் வார்த்தை!''

— ரசூல் கம்ஸதோவ்

□ □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறும் விழிநீர்ச் சிறுமி!

பவித்திரன்



கந்தல் உடை, கலைந்த கோலம்!
சிந்தீ விழச் சிதறும் விழிநீர்
நொந்த உளத்தினளாய்
வீதியோரம்
எவரும் காணக்
கிடந்தாள் அச்சிறுமி
வந்த எவருமே காணார் போல்
இந்தவாறே ஏகுதல் முறையா?
நைந்து வேகும் என் உளம்.
எந்த வினை மூண்டதுவோ?
நல்லதோர் கவிதை நலங்கெடக் கிழிந்ததுவோ?
பந்தமென எவருமிலாள்
சொந்தம் நாடி
அண்ணா என்றிரந்தாள்
அருகணைந்து
தஞ்சமே ஆனாள் எனை.
நாடிக் கை தொழுது நவின்ற மொழி கேட்டு
வேடிக்கை பார்ப்பேனோ யான்?
துயரெய்தி
பாடிக் கொண்டிருந்த வாயும் மூடிற்றாம்
பகலோன் தானும் தன் சொந்த மகள்
என நினைந்து சுடரொளி வீசிச் சிரித்தான்.

''இந்தா இதை உண்பாய்'' என்றுரைத்தேன்
விந்தை மிக உற
சிந்தை லயித்தாள் சிறிது.
என்ன இவள்!
சின்ன விழிகள் மலரச் சிரித்தால்
என்ன அழகு! என்ன அழகு!
நன்றி என அவள் நவில்கையிலே
பைந்தமிழின் பண்ணொலி யாழ் மீட்டியதோ?
நானிலம வென்றி கொண்டவனாய்
குன்றாய் நிமிர்ந்தேன்
நன்று செய்தாய் என அகம் ஒப்புகையில்
சிந்தை நிறைவுற,
வந்தவாறே நடந்தேன் நான்!



# பெண்ணியம்

தி. செல்வமனோகரி

காலகாலமாய்......
அழுக்குகள் கலந்தாலும்
வானறியும்
நதி(கள்) மாசற்றதென்பதை...

அந்த வானம்
பொழியக் காத்திருக்கிறது
எந்த மேகத் திவலைகளிலும்
நனையாமல்......
(நனைக்கப் படாமல்......)
நதிக்காய்க் காத்திருக்கிறது.

நதிக்கோ .....
கடலிடம்தானே
உறவு விதிக்கப்பட்டிருக்கிறது!
உப்புக்கரிக்கும் கடலிடம்தானே
விதிக்கப்பட்டிருக்கிறது!

கடலில் விழுந்த நதி
மீண்டும்
நதியென்று பெயர் கொள்வதில்லை



இத்தரையின்
எல்லைவரை விரட்டிச்சென்று
கலக்கச் சொன்னார்கள்
உயிருடனும் உணர்வுகளுடனும்
புதையச் சொன்னார்கள்
புதைத்து நின்றார்கள்.

இமயத்தில் ஜனித்தாலென்ன
சிவன் தலையில் தரி (வசி)த்தாலென்ன
கங்கை
வானம் தொடுவதில்லை! ;
தொடமுடிவதில்லை!
இன்றுவரை
கங்கையின் வெள்ளம்
பூமிக்கும் கடலிற்கும் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நோக்கு' என்றொரு முயல்வு

முருகையன்

**1962** ஆம் ஆண்டு தொடக்கம் 'அரசகரும மொழித் திணைக்களத்திலும்' பின்னர் 'கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலும்' நான் உத்தியோகம் பார்த்தேன். அப்பொழுதுதான் திரு. இ.இரத்தினம் அவர்களுடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது.

இரத்தினம் கலைப்பட்டதாரி. அவரது பிறப்பிடம் இணுவில். நிறைய வாசிப்பார். பழந்தமிழ்ப் புலமை வாய்க்கப் பெற்றவர்; அக்காலத்திலே கொழும்பிலே புகழ் பெற்று விளங்கிய ஆந்தியப் புலவர் சிவன் கருணாலய பாண்டியனாரைப் பெரிதும் மதித்தவர்; அவரிடம் தொல்காப்பியம், திருக்குறள், கலித்தொகை முதலான பண்டைத் தமிழ் நூல்களைப் பாடங்கேட்டவர்- பாண்டியனாரின் தனித்தமிழ்ப் பிடிப்பும் மரபுப் பற்றும் இரத்தினம் அவர்களிடமும் இருந்தது. அதேவேளை, ஆங்கில இலக்கியப் படைப்புகளையும் விமர்சனங்களையும் ஓயாது படிக்கும் ஈடுபாடும் இரத்தினத்தாரிடம் இருந்தது. தத்துவ விசாரமும் ஐரோப்பிய மெய்யியல் அறிஞர்களின் சிந்தனைகளும் அவரைக் கவர்ந்தன. இசைக் கலையிலும் நாடகக் கலையிலுங்கூட அவருக்கு விருப்பம் இருந்தது.

இப்படிப்பட்ட ஒருவர், கவிதைக்கும் விமரிசனத்துக்கும் என நோக்கு என்றொரு 'புதுமைப் பா ஏட்டைத்' தொடங்குவோம் என்று யோசனை கூறியபொழுது நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். 1964 இல், 'நோககின்' முதலாவது இதழ் வெளியாயிற்று. மூன்று மாதங்களுக்கு ஓர் இதழாக வெளியிட வேண்டும் என்பது எமது திட்டம். முதல் நாலு இதழ்களும் தட்டுத் தடங்கல் இல்லாமல் வெளிவந்துவிட்டன. ஐந்தாவது இதழ் சற்றுத் தாமதமாகத்தான் வந்தது. 1965 இல் எனக்கு ஏற்பட்டதொரு நோய் காரணமாக, சிறிது காலம் கலைத்துறை அலுவல்களை நான் கை சோர விட்டிருந்தேன். ஐந்தாம் இதழ் சுணங்குவதற்கு அதுவும் ஒரு காரணமாய் இருந்திருக்கலாம்.



பிறகு ஐந்து ஆண்டுகளின் பின்னர் 1970 இல் 'நோக்கு' முயற்சியைப் புதுப்பிக்க எண்ணி இன்னுமோர் இதழை வெளிக்கொணர்ந்தோம் – அத்துடன் 'நோக்கு' நின்றுவிட்டது. சுருக்கமாகச் சொன்னால், 1964தொடக்கம் 1970 வரை ஆறு இதழ்களை வெளியிடக்கூடியதாய் இருந்தது.

இலங்கையில் ஐம்பதுகளின் நடுப்பகுதியில் தேன்மொழி என்றொரு கவிதை இதழை வரதர் அவர்கள் மஹாகவியின் உதவியுடன் வெளியிட்டார். அது மாதந்தோறும் பிரசுரிக்கப்படவெனத் திட்டமிடப்பட்டு, ஆறு இதழ்களுடன் நின்றுவிட்டது. 'தேன்மொழி' வெளியிடும் முயற்சிகளிலும கணிசமான தொடர்பு எனக்கு இருந்தபடியால், கவிதை ஏடொன்றுக்கு அல்லது இலக்கிய ஏடொன்றுக்குப் பொறுப்பாசிரியராய் இருக்க வேண்டுமென்ற ஆசை அடி நாள்தொட்டே இருந்து வந்தது. அந்த ஆசைக்கு மற்றொரு தூண்டுதலும் உதவியாய் அமைந்தது. ஐரோப்பிய மொழிகளிலே இலக்கிய ஏடுகள் சக்தி வாய்ந்த கலை இயக்கங்களாய்ச் செயற்பட்டு வந்தமையை நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆங்கிலத்தில் அவ்வாறு மேலோங்கி நின்ற ஏடுகள் சிலவற்றைப் படித்த அநுபவமும் சற்றே இருந்தது. அந்தவிதமான முயற்சி வளமும் கலை இயக்கச் செழுமையும் தமிழுக்கும் கிடைக்க வேண்டும் என்னுமோர் ஆர்வமும் எனக்கிருந்தது.

'நோக்கைத்' தொடங்கிய பொழுது, அனைத்து எழுத்தாளர்களுடனும் கலைஞர்களுடனும் கவிஞர்களுடனும் நெருங்கிய தொடர்பும் தோழமையும் கொள்ள வேண்டும் என்ற வேட்கை என்னுள் நிரம்பி இருந்தது. 'நோக்குக்கு' வரும் விடயங்களையிட்டு நுணுக்கமான விமரிசனங்களை (அடிக்கடி நேரிலும் கடித மூலமும்) பகிர்ந்துகொண்டு, கலை இலக்கியத் திருப்பணியை ஒரு வீறார்ந்த பொதுத் தவமாகச் செய்ய வேண்டும் என்ற கனவுகளில் அடிக்கடி மூழ்கிவிடும் பழக்கமும் இருந்தது.

திரு. இரத்தினத்துக்கு அவை போன்ற எண்ணங்கள் இருந்தன. அவர் மொழிபெயர்ப்புகளில் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார், ஆங்கிலக் கவிதைகளையும் றஷ்யன். ஸ்பானிஷ், ஜேர்மன். ஃவிறெஞ்ச், சீனம் முதலான பிற மொழிக் கவிதைகளையும் எப்படியாவது தமிழிற் கொண்டு வரவேண்டும் என்ற துடிப்பு அவரிடம் இருந்தது. இதன் பேறாக, அவர் மொழிபெயர்ப்பு முயற்சிகளில் பெரிதும் ஈடுபட்டார். 'நோக்கும்' மொழிபெயர்ப்புக் கவிதைகள் பலவற்றைத் தாங்கி வெளியாயிற்று.

அதே சமயத்தில், செவ்வியற் பாங்கான பழந்தமிழ் அமைப்புக்கொண்ட மொழி நடையும் 'நோக்கு' இதழில் மேலோங்கி இருந்தது. கவிதைகளில் மாத்திரந்தான் அந்தக் 'கடுமை' இருந்ததென்று நினைக்க வேண்டாம். எப்பொழுதாவது வெளியாகிய இரண்டொரு கட்டுரைகளிற்கூட, அந்தப் பழமரபுப் பெருமிதம் மிதப்புடன் காணப்பட்டதென்றே கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நோக்கு' வாசகர்கள் இதனை வெளிப்படையாகவே சில வேளைகளில் நமக்குத் தெரிவித்தனர். இவ்விதமான முணுமுணுப்புகளுக்கு மறுமொழி சொல்வன போல 'நோக்கின்' ஐந்தாம் இதழிலே பின்வரும் வரிகள் காணப்படுகின்றன. ''நோக்கில் வரும் செய்யுள்கள் கடினமானவை என்று சிலர் நமக்குக் கூறியுள்ளார்கள். கடினமானவை என்பதால், செய்யுள்கள் குற்றமுடையவை ஆகா; எளியவை என்பதாலும் அவை நயமுடையவை ஆகா ..... செய்யுள் உருவாகும்போது கவிஞனின் அநுபவ உலகு என்ன சொற்சூழலில், உணர்வுலகில் இருக்கிறதோ, அவற்றைப் பொறுத்துக்தான் கவிதை உருவம் எடுக்கிறது' கவிதை நயப்பில் சொல்லெளிமையும் சொல் விற்பனமும் ஒரு கூறு.'' கொள்கையளவிலே, கடுமை - எளிமை பற்றிய மேற்படி விளக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே இருக்கிறது ஆனால், நடைமுறை நிகழ் உலகில் வாசகர் நிலையும் ஏற்புத் திறனும், சுவைத்திறமும் ஆகிய காரணிகள் பலவும் சேர்ந்துதான், படைப்பாளியின் எழுத்தியல்புகளைத் தீர்மானிக்கின்றன. இல்லையா?

இவற்றை எல்லாம் நினைவிற் கொண்டு, 1970 இல் 'நோக்கினைப், புதுப்பித்து மீளக் கொண்டுவர எண்ணிய பொழுது ஒரு பரந்த தளத்தையும் களத்தையும் அமைத்திட விரும்பினோம் - 'இதழ் அவை' என்று புதியதோர் அவைக்களத்தை நிறுவி அறிவித்தோம். அப்துல்காதர்லெப்பை, இ. அம்பிகைபாகன், ஏ. இக்பால், வி. கி. இராஜதுரை, வி. எம், இஸ்மாயில். எஸ் ஏரம்பமூர்த்தி, கு. கணபதிப்பிள்ளை, கே கணேஷ் செ. கதிர்காமநாதன். சி. கனகசூரியம், சி. குமாரன், வே. குமாரசாமி, மு. சடாட்சரன், பா. சத்தியசீலன், க. இ. சரவணமுத்து, சரவண சிதம்பரநாதன், தி. சிவசாமி, இ. சிவானந்தன், மு. க. சூரியன், சில்லையூர் செல்வராசன், சபா ஜெயராசா, செ. து. தட்சணாமூர்த்தி நீலாவணன், எம். ஏ. நுஃமான், சக்தி பாலையா, அ. வி. மயில்வாகனன், மஹாகவி, எம. ஏ. யூ. லெப்பை, ஆ. லோகேஸ்வரன், சி. விநாசித்தம்பி, என். வீரமணிஐயர், செ. வேலாயுதபிள்ளை ஆகியோர் அந்த இதழ் அவையில் இருந்தனர். அத்துடன், பின்வரும் கொள்கையையும் வெளிப்படுத்திஇருந்தோம் - ''இன்று நம்மிடையே பல்வேறுபட்ட கவிஞர்களைப் பார்க்கிறோம் எழுதத் தொடங்கி, முயன்று முன்னேறிக் கொண்டிருக்கும் கவிஞர் ஒரு வகை; அவ்வாறு முன்னேறி ஒரு குறிபபிட்ட தரத்தினை எய்திவிட்டோம் என்ற திருப்தியோடு இடையிடையே கவிதைகளை எழுதியும் வெளியிட்டும் வருவோர் மற்றொரு வகையினர்; ஈழம், தமிழகம், உலகம் என்று விரிந்து செல்லும் நோக்கு விசாலத்துடன். கவிதைக் கலையின் எல்லைகளைத் தொட்டு அப்பாற் செல்ல முனையும் கலைமுகத்து முனைவர்கள் வேறும் சிலர். இவ்வாறான சகலரையும் அரவணைத்து முன்செல்லும் நோக்கமுடையது நமது பா ஏடு.''

'நோக்கங்கள் எல்லாம் நல்லவைதான்; அவை எவ்வளவு தூரம் நிறைவேறின?' என்று யாராவது கேட்கலாம் - அது



வேறு கதை. 'ஞாலத்தில் எண்ணியது நண்ணுமோ?' என்பது கேள்வி. அதற்கு 'நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம்' என்பது தானே மறுமொழி! பலியாமைக்குச் சில காரணங்கள் இருந்தன. ஒன்று - கவிஞர்கள் பலரும் தாம் எழுதுகிறவை எல்லாமே 'நோக்கில்' இடம்பெற வேண்டும் என்று விரும்பினார்கள். அது இயலாத ஒன்றுதானே! அதுமட்டும் அல்லாமல், அது எல்லாத் தருணங்களிலும் விரும்பத்தக்கதும் இல்லை அல்லவா? மற்றக் காரணம் - இதழ் நடத்துவதன் பொருண்மிய அடிப்படைகளைக் கவனிக்காமல் விட்டது; விற்பனை ஏற்பாடுகளையும் விநியோகத்தையும் புறக்கணித்து நடந்துகொண்டது.

இவை எல்லாம் கலை இலக்கிய இதழ் நடத்த முனைகிறவர்களுக்கு நல்ல பயனுள்ள பாடங்கள்தான்! ❋

# இரண்டு கவிதைகள்

## இயல்வாணன்

### இருப்பு

காதைக் கூர்மைப் படுத்திக் கொள்!
உருவழிந்து போன அதன்
உள்ளிருந்து ஒரு பாடல் கேட்கிறது.
காதைக் கூர்மைப் படுத்திக் கொள்!

இறந்து போன வாழ்வை
அது முணுமுணுக்கிறது.

நிலவில் குளித்ததையும்
நெடு வானில் அலைந்ததையும்
மனதை அலை பாய்ச்சி வாழ்வமைத்ததையும்
அழகான வரிகளில்
சொல்கிறது அப்பாடல்.
இனிப் பார்!
அதன் உருத் தெரியும். ❋

### முரண்

வண்ணங் குழைத்த மாலை
பொன்னின் குழியாய்க் கதிரோன்
அலை தவழும் கடல்
காற்றை உந்துமபுட்கள்
அழகழகாய்ப் பூக்கள்.

ஓய்வற்ற வெடியொலி
மெய் பிளந்த பிணங்கள்
முகமிழந்த வீடுகள்
மகிழ் மறந்த மனிதர்கள்
வண்ணங் கலைந்த மாலை! ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபுத்திரன் கவிதைகள்

## பாம்புகள் என்பவை

பாம்புகள் என்பவை
பரிதாபமானவை.
இரைதேடி அலைதலும்
புணர்தலும் கலைத்து விலகு
தலும்
புணர்தலுக்கு அலைதலுமாய்
என

பாம்புகள் என்பவை
பரிதாபமானவை.
வாலைச் சுழற்றி
இரையை இறுக்கி
சந்தோஷம் காட்டும்
மலைப்பாம்புகளாய்
பாம்புகள் என்பவை
பயங்கரமானவை.
எதற்கோ வெட்கி
முழுதும் தன்னை
மண்ணுக்குள் ஒளிக்கும்
மண்ணுளிப் பாம்பாய்
பாம்புகள் என்பவை
மென்மையானவை.

## வாழ்க்கை

ஏக்கத்துடன்
கரைகிறது
காகம்,
தாழிக்குள்
தவற விட்ட
எலும்புக்கு -
கற்களைப் போட்டபடி!

## இப்படித்தான்

ஓடிப்போன
எங்கள் நாயை
கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்
அப்பா -
குரல் கொடுத்து.

முதல் வரியுடனே
நின்றுபோன
கவிதையை
யோசித்துக் கொண்டிருந்தேன்
நான்.

விடிந்து கூட
வரவில்லை இரண்டும்.

இப்படித்தான்
வாழ்க்கையும்......

## பாம்புகளுடன்...

எல்லாருக்கும்
அனுபவமிருக்கிறது
பாம்புகள் பற்றிய அனுபவம்.
எல்லாருக்கும்
ஞாபகம் இருக்கிறது
பாம்புகள் பற்றிய ஞாபகம்.
ஆனால் -
பாம்புகளுக்குத்தான்
ஞாபகம் இல்லை,
எவரைப் பற்றியும்
எப்போதும் எப்படியும் -
தன்
இரை தேடுதலும்
புற்றில் ஒளிதலும் தவிர!

## கதவு

எல்லார் வீட்டின்
கதவுகளும்
ஒன்றுபோல் இருப்பதில்லை
என்றாலும் -
எல்லார் வீட்டுக்கும்
கதவுகள் இருக்கின்றன
நிச்சயமாய்! ❋



# செல்லம்மா!

### காரை. செ. சுந்தரம்பிள்ளை

காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங்கயிறாய்ச் செல்லம்மா நிற்கின்றாள்
ஓய்ந்த கடையாக
உலர்ந்த சருகாகத்
தலைமேலே கை வைத்துக்
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங் கயிறாய்ச் செல்லம்மா நிற்கின்றாள்.

வெங்காயம் நட்டதுவும் விழிபிதுங்கக் காய் கறிகள்
சங்கானைச் சந்தையிலே தலைமேல் சுமந்து விற்று
பங்கு வியாபாரம் பார்த்துக் களைத்தும்; அச்
சிங்காரம் தரகனிடம் சிக்கிப் பணத்தோடு
தங்கநகை யாவும், தாரைவார்த்தும், நெடு நாள்
பட்ட துயரமெல்லாம் பாம்பாகத் தேளாகக்
கொட்டக் குமுறி மனம் கொந்தளிக்கத் துன்பமெலாம்
மேய்ந்து அவளுளத்தை வேதனைகள் செய்திடவே
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங்கயிறாய்ச் செல்லம்மா நிற்கின்றாள்.

குழந்தைக்குப் பாலின்றிக் கும்பி எரிகையிலே
தளர்ந்த அவளுக்குச் சற்று மிரங்காமல்
கழன்ற உறவினரைக் காறி உமிழ்ந்தவரைச்
சுழன்று வர வைப்பனெனச் சூளுரைத்து நின்றதுவும்
பெற்ற மகன்வளர்ந்து பெரிதாகிப் பள்ளியிலே
கற்று முடித்துப்பல் கலைக்கழகம் தான்சென்று
முற்றுமவள் உழைப்பை முழுதாகவே யுறிஞ்சிப்
பெற்றவொரு பட்டத்தால் பெருமையிவள் பெற்றதுவும்

கரும்பு நாடி வந்தவொரு கட்டெறும்புக் கூட்டம் போல்
விரும்பி யிவள்மகனை விலை கொடுத்து வாங்குதற்குப்
பெரும்பணக் காரரெலாம் பேரமே பேசியதும்
திருமணமே செய்து வைத்துச் சீதனமே வாங்கியதும்
மருமகளால் சண்டையிட்டு மகன் பிரிந்து சென்றதுவும்
சீமைக்குப் போய்ப் பெரிய சீமானாய் வாழ்ந்ததுவும்
ஊமைக் கனவாக உள்ளுக்குள்ளே யறுக்கக்
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங்கயிறாய்ச் செல்லம்மா நிற்கின்றாள்.

ஆண்டு பலசென்றும் அவன் வந்து பார்க்கவில்லை
அன்னைக் கரைக்காசும் அவனோ அனுப்பவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன மகன்? இவன்தான் என்றே பலர் பழித்த
காண்டா மிருகமவன் கயமைக் குணம் படைத்தோன்
மாண்டு விட்டான் என்ற மரணச் செய்தி கேட்டு
நெஞ்சம் வெடிக்க நிலை தளர்ந்து யாரெனக்குத்
தஞ்ச மெனக்குமுறித் தலையிலடித்தபடி
காய்ந்து வறண்ட கலவோட்டுக் கோலத்தில்
தேய்ந்த பழங்கயிறாய்ச் செல்லம்மா நிற்கின்றாள்! ❋

## பிறப்பு

### சத்தியபாலன்

என்றும் போலத்தான்
அன்றும்
வெறும் பேச்சென
ஆரம்பமாயிற்று.

மினுக்கி நெளிந்த
போலித்தனத்தில்
உள்ளம்
வழமைபோல் குமுற,
மன ஓட்டின்
மென்பாகம்
சிறிதாய் ஒரு வெடிப்புக்
கண்டதென
மீறி வழிந்தன வார்த்தை
அம்மணமாய்!
இங்கிதம்—
நெஞ்சினடியில்!
உயர பேதங்கள்
உதறப்பட்டன
வயசும் — பீடங்களும்
மண்ணுட் புதைந்தன.
நெடுநாட் சகிப்பின்
கடையெல்லை
வீசல்!
முகம் கறுத்து
முறிந்தன உறவுகள்!
மறுப்பும் சம்மதமும்
மௌனத்தாற் சொல்லி
நேற்றுவரைக்கும்
ஒதுங்கி நடந்தவன்
காணாமலே
போயினான்.

நெஞ்சிற்பட்டவை
பச்சை பச்சையாய்......
அதிர்ந்து விலகின
எதிர்த்திசைகள்
சோனாவாரிப்
பொழிவின் முடிவில்.....
லேசாய் உணர்ந்தான்.

நீ......ண்ட நாட்களின்
பிறகு
வாழ்வு அவனுடன்
சிறுவிரல் கோத்து
நடையிடலானது
காகிதப் பூக்கள்
கால்களினடியில்......
விமர்சன ஈட்டிகளை
பெருந்தன்மையுடன்
வாங்கிக் கொண்டது
முதுகு —
பாடி நடந்தான்
அவன்! ❋



## உள்ளிருள்

### செ.பொ.சிவனேசு

கண்ணிருந்தது திறந்தபடியே
கருவிழி வெண்விழியும்
காணுதலும் சீரே
கட்புலத்திற்கு ஊறு ஏதுமில்லை
ஏனோ
குருடாகிக் கிடந்ததென்
வாழ்வொழிந்த நாட்கள்!
எல்லாமே இருளென
தெரிந்ததும் ஏனோ!

இருளுள்ளா இத்தனைக்கும்
பூட்டிக் கிடந்தேன்!
அல்லேல்
இருளா என்னுள்
பூட்டிக் கிடந்தது!

பேய்வீடாய்க் கிடந்ததுவே என்
உளவீடு!
இருளுள் தானாம்
பேய்களின் இருப்பு.
பெயர்கள்தான் எத்தனை
பேய்களுக்கு -
குலவெறி மதவெறி
பொறாமை எத்து
பேராசை காமம் சினம்.....

எவ்விதம் உணர்ந்தேன்?
இன்றெவ்விதம்
கண்ணொளி பெற்றேன்?
கவிதைக்குள் கிடந்தெழுந்த தீப்பொறியோ!
அறிந்திலேன்
எனினும்,
ஒன்றறிவேன்!
இருளிலா இத்தனைக்கும்
பூட்டிக் கிடந்தேன்?
அல்ல,
இருளே என்னுள்
பூட்டிக் கிடந்தது!
உள்ளிருளே வெளியிருள்
என்பதுமுணர்ந்தேன்! ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

"எந்தக் கவிஞனும் தன் இஷ்டத்துக்கோ அல்லது பிறர் கட்டாயத்துக்கோ கவிதை எழுத முடியாது. மனஎழுச்சியோடு தான் கவிதை உதயமாகும். அற்புத உணர்ச்சியிலிருந்து, சோக முதிர்ச்சியிலிருந்து, இன்ப வெறியிலிருந்து உண்மைக் கவிதை உதயமாகிறது. பிறர் கட்டளையிட்டு கவிஞன் கவிதை எழுத முயல்வது வீண்முயற்சிதான்; அவ்வாறு எழுதப்பட்ட கவிதை, யாப்பின் சுமையே தவிர, உண்மைக் கவிதையாக என்றும் நின்று நிலவ முடியாது.

... வாழ்க்கையின் பிரதிபலிப்பாக, அழியாத உண்மையாக சிருஷ்டிக்கப்படுவதே கவிதை - கவிஞனின் ஆவேச மொழி.

...உலகத்தில், கவிதை எதையும் தொட்டு நிற்கும் ஆற்றல் பெற்றது. எப்பொருளும் கவிதையில் இடம்பெறும்; உலக சிருஷ்டிக்கு மேலாக, கவிஞனின் கற்பனை உலகம் மிகமிக விசாலமானது. எதையும் கொள்ளவும் தள்ளவும் ஆற்றல் பெற்ற ஆன்மீக ஆக்கம் கவிதை!

...ஒரு கவிஞனை மற்றொரு கவிஞன்தான், அருமையாக மொழிபெயர்க்க முடியும். மூலத்தை நிர்மூலமாக்கும் மொழி பெயர்ப்பு கவிதையின் அந்தரங்கத்தையே புதைத்து விடும். சிறந்த செல்வாக்குள்ள கவிஞர்கள், மனோதிடம் கொண்டு மொழிபெயர்ப்பில் ஓரளவு இறங்கலாம். மட்டமான- உணர்ச்சியற்ற மொழிபெயர்ப்பில் மூலத்தின மின்னல் சிதறி வெடித்துப்போகும் ..."

—ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி
1820 இல் எழுதிய 'Defence of Poetry'
என்ற கட்டுரையின் சில பகுதிகள்.

தமிழில்: V.R.M. செட்டியார்

நன்றி : கவிதை மின்னல் (1952)



# பிரிவும் துயரும்!

எஸ். உமாஜிப்ரான்

இதயம் கனக்க
விழிகள் பனிக்க
பிரிவை நொந்து
பரிதவிக்கிறேன்
என்
அன்பின் அழுத்தம்
அவளில் இருந்து
விலகிய கணத்தை
நினைந்து நினைந்து
நெடுமூச்செறிகிறேன் ......

கண்ணீர் மல்க
காதலைக் கொன்று
கையசைத்தவள் செல்கையில்......
வார்த்தைகளற்று......
ஏதும் செய்யவகையற்று ...
முடமாய்
விறைத்து நின்றதை,
எனக்கு விதிக்கப்பட்டது
இதுவென்று
தேற்றிக் கொள்ள முடியவில்லை.

அறுக்க முடியாத
தொப்புள் கொடி உறவாய்
நிழலெனத் தொடரும்.....

கொல்லப்பட்ட
காதலின் எச்சங்கள்
என் இதயத்தைக்
குத்திக் கிழிக்கின்றன...
காதலற்ற தனிமையில்
வெறுப்பூட்டும்
இருப்பின் வெறுமையில்
ஊசியாய் உறுத்தும்
அவள் நினைவுகளின்
முற்றுகைக்கிடையில்
மூச்சுத் திணற நசியுண்டு
அவஸ்தையுறுகின்றேன்.....

உதறி எறியும்
அவள் நினைவுகள்
ஒவ்வொன்றும்
சுவர் மீது
எறியப்பட்ட பந்தாய்
என்னையே வந்தடைகின்றன.

அவள் நினைவுகளின்
தளையிலிருந்து விடுபடும்
என் முயற்சிகள்
முனை முறிந்து
மழுங்கிப் போகின்றன.

எப்படி மீளுவேனோ
இத் துயர்நிறை
புதைசேற்றிலிருந்து......?
எதுவரை தொடருமோ
இத் துயர்நிறை நாட்கள் ..! ※

"... உணர்ச்சி வயப்பட்ட வெளியீடே உண்மைக் கவிதை; ஆழத்திலிருந்து அபூர்வமான உண்மைகளைக் கவ்விக்கொண்டு வெளிவருகிறது. உண்மையே அதன் அத்திவாரம்; உண்மை இல்லாவிடில் கவிதை மங்கி மடிந்துவிடும். உண்மைக் கவிதையில், அழகு மண்டிக்கிடக்கும். இன்பத்தைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டுவது அழகுதானே. அழகுணர்ச்சி, கவிதையின் உடலுக்கு மெருகேற்றுகிறது. சக்தி நிறைந்த கவிதைதான், கவிஞனுக்கும் வாசகனுக்கும் உணர்ச்சியின் வெற்றியை உறுதியாக எடுத்துக்காட்டி இன்பம் ஊட்டுகிறது." — லீஹண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கவிதை' இதழ் பற்றி...

'...1994இன் சித்திரை - வைகாசி; ஆனி - ஆடி; ஆவணி - புரட்டாதி என்று மூன்று இதழ்கள் பார்வைக்குக் கிடைத்தன. இம்மூன்று இதழ்களுமே இது இளம்கவிஞர்களுக்கான ஒரு களம் என்னும் நிரூபணத்துடன் மலர்ந்திருக்கின்றன...நாற்பது இளம்கவிஞர்கள் இந்த மூன்று இதழ்களுக்குள் அறிமுகமாகின்றனர்.

எத்தனை எத்தனை இழப்புகளுக்கு மத்தியிலும் இயல்பாக வாழப் பழகிக்கொண்ட மனத்திடம்...

அழுத்த அழுத்த நிமிர்கின்ற வேகம்...

குண்டு போடுகின்றாயா போட்டுவிட்டுப் போ என்னும் அலட்சியம்...

சண்டையா...போரா...வந்துபார் என்னும் துணிச்சல்...

ஒவ்வொரு கவிதையிலும் நுரை ததும்ப நுரை ததும்ப பொங்கிப் பொங்கி...

இவ்விதழ்களின் இன்னொரு சிறப்பம்சம் இளம் கவிஞர்களின் நேர்காணல்கள்.

...பிரபல கவிஞரும் விமர்சகருமான சோ. பத்மநாதன் எழுதும் 'கவிதைக்கலை' என்னும் தொடர் கட்டுரை மூன்று இதழ்களிலும் இடம்பெற்றுத் தொடர்கிறது. கவிதைபற்றிய பல அற்புதமான செய்திகளை அழகாகத் தொகுத்துத்தரும் அருமையான கட்டுரைத் தொடர் இது. இளம் கவிஞர்களுக்கு ஒரு கைநூல் போன்றது "...

- தெளிவத்தை ஜோசப்
'வீரகேசரி' - 18.2.1995

* மலையகத்தின் மூத்த எழுத்தாளர்

கவிதை இரண்டாவது இதழில் மைதிலி அருளையா எழுதிய, 'இன்னொரு ஸ்பாட்டகஸ்' என்ற கவிதையினை, சென்னையிலிருந்து வெளிவரும் இலக்கிய இதழான சாரதா, தனது ஜுலை 1994 இதழில் மறுபிரசுரம் செய்துள்ளது.



# கடல்

அது இரண்டாவது உலகயுத்த காலம். முகில்கள் குண்டுமழை பொழிந்து லண்டனை அழித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் தம்பிமுத்து லண்டன் கவிதையைக் காப்பாற்ற முன்வந்தார். அவரை Midwife of London Poetry என்று அழைப்பதுண்டு.

இங்கு தமிழீழப் போர்ச்சூழலில், இளங்கவிஞர்களின் கவியாற்றலை அழியவிடாது காப்பாற்ற கவிதை சஞ்சிகை வெளிக்கொணரப்படுகிறது.

எங்கள் கைகளில் தவழ்வது ஓராண்டு கவிதைத் தேன்மலர்.

தமிழீழக் கவிதை வாழ்க!
'கவிதை' சஞ்சிகை வாழ்க!

சிரித்திரன் சுந்தர்
யாழ்ப்பாணம்.

மக்களினது கலாசாரத்தை மெல்ல மெல்லச் சீர்குலைப்பதன்மூலம், ஒரு தேசத்தைக் கருவறுப்பது சுலபம் என்பதை ஏகாதிபத்திய நாடுகள் தெளிவாகப் புரிந்துவைத்துள்ளன.

கருவிகள் ரீதியான படையெடுப்பை விட, இக் காகிதத் தாக்குதல் இலகுவானது.

சஞ்சிகைகளுக்கூடான கலாசாரத் தாக்குதல் மக்களின் எதிர்ப்பின்றியே - இன்னும் சொல்வதானால் அவர்களின் அனுசரணையுடனேயே-அவர்களை ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்காகத் தயார்செய்து கொடுக்கிறது.

இக்காகிதக் கருவிகள் பற்றிய விழிப்புணர்வை எமது சமூகத்துக்கு ஏற்படுத்தவேண்டிய பொறுப்பும், தரமான வாசிப்பு உணர்வை அவர்களிடையே ஊட்டவேண்டிய பொறுப்பும் ஈழத்துச் சஞ்சிகைகளுக்குரியது. தான் சார்ந்த தளத்தினூடாக அதைச் செய்ய முயல்வதன்மூலம், கவிதை தன்னுடன் எங்களைக் கை குலுக்கவைத்துள்ளது.

வாழ்த்துக்கள்!

பொ. ஐங்கரநேசன்
நிர்வாக ஆசிரியர்
'நங்கூரம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால நிலை

இளந்திரையன்

ஆனந்தக் கூத்தாடி அவசரமாய்
போருக்குப்
புறப்படப் போகும் கடைசிக் கணத்தில்,
வீட்டிலிருந்து சதா
'அல்பத்தைப்' பார்த்து அழுதிருக்கும் உன்முகம்
இதயத்தில் மினுங்கும் மங்கலாய்......!

வானுறையும்,
வெள்ளித் துகள்களில் ஒன்றாய்
எட்டாத் தொலைவில் நீ .....!

காற்றோடு சேரும் தீயின் நாக்காய்
மனசோடு ஏதோ இனம்புரியாத் துயர்!
உயிரிற் கிளைத்த மெய்யுறவுப் பாசம்
பிசுபிசுத்துப் போனதாய் உணராதே
பிரிவுத் துயர்க்கடலில் அமுங்கி நிமிருகிறேன்-
காலமிதன் கோலமிது!

போகிறவழி மீளவும் நான்
உயிரேந்தி வரநேர்ந்தால்,
மெய்சிலிர்த்துக் காணவருவேன்! ❋

## ?

சத்துருக்கன்

எனது இருப்பிடம் எங்கே?
என் முகம்
நடை
அசைவு
எல்லாம் எங்கே?
என்னுள் துடித்துக் கொள்ளும்
இதயத்தில் வெடிப்பு.
எனது சிம்மாசனத்தில் வெறுமை-
திருடிக் கொண்டவர் யார்?
தேடித்திரிந்து அலுத்து அலுத்துப்
போகிறது! ❋



மஹாகவி நினைவுக் கவிதைப் போட்டியில்
முதற் பரிசு பெற்ற கவிதை

## இவன் கவிஞன்!

த. ஜெயசீலன்

சோகத்திற் கெட்டுச் சொரிந்து..., மலைகவிழ்ந்த
நோவுக்குள் வெந்து.....
நொடிபவனா ... மெய்ப்புலவன்?
காதலிலே தோல்வி; கறுத்த குறுந்தாடி!
கண்வரளச் சோகம்!
கலைந்த உடைபுனைந்து.
எண்ணமெலாம் வெறுத்து எதையெதையோ.....
பிதற்றுகிற ... ''புண்மொழியா...... கவிதை?''
''புலம்பலடா'' ! ... போர்வறுமை
மணவதைக்கும் நேரம் மருண்டு ...... 'துயர் வசனம்'
பண்ணும் பயல்தானா பாத்தலைவன் ...?
''இல்லையடா'' !!
எண்ணம் பசிக்க,
இருளின் சுமை குறைக்க,
வண்ணக் கவிபாடி வழிகாட்டி ...... புரட்சிஅனல்
விண்ணைத் தொடுமட்டும் வீரத்தின் 'திரிதூண்டி'
சன்னத்தின் முன்னுஞ் சளைக்காத.....
போர்த்தினவை,
அன்பை, அணைப்பை, அருங்காதல்
மெய் இயற்கை இன்பத்தை ...,
இடரை,
இடிக்கும் துயர் அதிர்ச்சித்
துன்பத்தில் துணிவை, துணையாகும் 'மெய்ப்பொருளை'
கண்முன்னே தோன்றிக் கனிவாய் வழிநடத்தி
உண்மைக்கு 'வெற்றி' உதவவரும் 'காலத்தின்'
தர்மத்துத் தீர்ப்பை,
தனது கவிமனத்தில்
ஊற்றாகக் கொண்டு உலகுக்கு உதிரமிட்டு
காற்றாகி, மூச்சாய், கனலாய், கடல்விரிவாய்......
ஏற்றாற் போல்.....
யாரும் எளிதிற் புரிந்துரைக்க......,
ஓசை உயிராய், உணர்வே உடலாக்கிப்
பாஷை தொடுத்துப் 'படபடக்குஞ்' சந்தத்தில்
ஆசைக் கவிதை அருள்வானே... ! .. மானுடத்தைப்
பூசைப் பொருளாய், புண்ணியமாய்...... மாற்றுதற்கு
காசுக்கு முன்னாற் கைகட்டாக் காட்டாறாய்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிக்கும் மண்ணின் நினைவின் நிசச்சான்றாய்......
ஆர்க்கும் அடிபணிந்து அசையா...... நிமிர் அறமாய்......
ஏய்ந்த நொடிக்குள் எரிக்கும் சுடுசொல்லாய்......
நிற்பானே......! அவன்தான் நிசக்கவிஞன்!
புவியியல்பைக்
கற்பானே ......! கலங்காக் 'களக்' கவிஞன்!
இவனெழுந்தால்... ,
ஆயிரமாய் எங்கும் அலைந்து 'அடிதடக்கும்'
வாய்க்கவிகள் நூர்வார்;
வசந்தச் சிலுசிலுப்பில்;
தாய்மடியாள் ஆர்ப்பாள்;
தமிழிற் பதர் விலக்கித்
தாகமது தீர்ப்பாள்; சமைப்பாள்;
அறுசுவைதான்! ❋

# ஒரு புலம்பல்

ஆங்கிலத்தில்: P. B. ஷெல்லி

ஓ உலகே! ஓ வாழ்வே! ஓ காலமே!
உங்கள் இறுதிச் சுவடுகளை
பற்றியபடி
மேனி நடுக்குற, நான் நின்ற காலம்!
உமது இளமையின் உன்னதம்
எப்போ மீளும்!
இல்லை, ஓ ......ஒருநாளும் இல்லை!

ஒளியை விட்டு இருளை விட்டு
களியொன்றெழுந்து பறந்திட முனைந்தது.
மலர்ந்த வசந்தமும் கோடையும்
மாரியின் வெண் பனியும்,
நலிந்த நெஞ்சில் கவலை நிறைக்கும்!
ஆனால் உவகையோ
இல்லை, இல்லை,
அறவே இல்லை! ❋

தமிழில்; கு. சிறீகணேஷ்



# என் கவிதை

## தெல்லியூர் ஜெயபாரதி

வானத்தின் நீலம்
மௌனமாய்க்கூட வரும்...
பனியும் மென்புகாராய்
வயலோடு இணைந்திருக்கும்...
தென்றலுக்கும் குளிரெடுக்கும்...
குளிரோடு காதோரம் பாட்டெழுதும்...
பூவாசம் உன் நினைவுகள்போல்
நாசியில் அமரத்துடிக்கும்...
துண்டுப் பேப்பருக்காய்—
துவட்டாத தலையோடு
பரபரக்கும் உன்னிடம் - நான் விடும்
கடைக்குட்டி உமாவை
நீ அகப்பைக்காம்பால்
ருசி பார்ப்பாய்...
ஒருகிலோ சீனி வாங்கப் போகாத
என்மீது பாய உன்கோபம்
அலங்காரமாய் இங்கு காத்திருக்கும்...
பேப்பர் - பின் நானே தேடி
பேனாவைக் காணாது தேட
அது,
நீலமாய் ஜுவாலை காட்டி
அடுப்பிலே அழகாய் உருகி எரிந்திருக்கும்! ❋

## எறிகணைகள்

சாரங்கன்

மருந்து வைத்து
மந்திரம் சொன்னதும்
கூவிக் கொண்டு
உயிர்களைத் தேடும்
ஏவற்பேய்கள்! ❋

## வாழ்த்து!

மயன் - 2

அன்று அமாவாசை-
குண்டும் குழியுமாய் இருந்தது
ரோட்டு...
எனது மந்தகதிக்கு இசைவாய்
'லைற்' பொருத்திய சைக்கிளில்
வழிநெடுகே வந்தான்
ஒருவன்......
அவனுக்கு என் வாழ்த்துகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாகவி நினைவுக்
# கவிதைப் போட்டி முடிவுகள்

## முதற்பரிசு ரூபா 500/=

**தலைப்பு**

த.ஜெயசிலன்
*328, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

**'இவன் கவிஞன்!'**

## இரண்டாம் பரிசு ரூபா 300/=

சு.ஸ்ரீகுமரன்
*(இயல்வாணன்)*
*முருகேச பண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.*

**'வாழ்வைப் பற்றிய தேடல்'**

## மூன்றாம் பரிசு ரூபா 200/=

செ.பொ.சிவனேசு
*சைவப்பாடசாலை ஒழுங்கை,*
*கோண்டாவில்.*

**'உள்ளின் பறவை'**

பரிசுபெற்ற கவிதைகளும்தரமான ஏனைய கவிதைகளும், 'கவிதை' இதழில் தொடர்ந்து வெளியாகும். போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும், கவிதைகளைத் தேர்வுசெய்து உதவிய கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களுக்கும் எமது நன்றிகள்!

- ஆசிரியர் ❋

---

## விடியலைத் தேடி......

பரந்தனூரான்

*விளையாட்டு மறந்த*
*உடல்,*
*கல்லாகிப் போன*
*நெஞ்சு,*
*துள்ளல் அற்ற*
*கால்கள்-*
*களம் நோக்கி.*

*அடிவாங்கி(ச்)*
*செத்துப் போன மனசு*
*விடியலைத்*
*தேடுவதற்காய்உயிர்த்து......*
*அதனால் -*
*துள்ளல் அற்ற*
*கால்கள்*
*களம் நோக்கி......*
*உறுதியாய்!* ❋



# கவிதைக் கலை
## சோ.பத்மநாதன்

5

### கவிஞனின் கருவிகள்

## 1 – உவமையும் உருவகமும்

இசைக்கு ஊடகம் ஓசை; ஓவியத்துக்கு ஊடகம் வண்ணம் (நிறம்) ; சிற்பத்துக்கு ஊடகம் கல், உலோகம், மரம், பளிங்கு முதலியன; கவிதைக்கு ஊடகம் மொழி. எனவே, கவிதை மொழியின் வளங்கள் அனைத்தையும் பயன்படுத்துவது.

மொழியின் வளங்கள்தாம் எவை? உவமை, உருவகம், படிமம், குறியீடு முதலியன. இலக்கண நூலார் இவற்றை அணிகள் என்பர் ; அதாவது, அணிகள் கவிதையை அழகுசெய்பவை.

நாம் கண்ட, கேட்ட, உணர்ந்த ஒன்றை, அதுபற்றித் தெரியாத ஒருவருக்கு விளக்கவேண்டுமானால், தெரிந்த பொருளோடு அதைத் தொடர்புபடுத்த வேண்டும்; அதாவது, தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போகவேண்டும்.

பிரிவால் தான்படும் துன்பத்தை தலைவி தோழிக்குச் சொல்கிறாள்:

*''தூண்டிற் புழுவினைப்போல் - வெளியே*
*சுடர் விளக்கினைப் போல்*
*நீண்ட பொழுதாக - எனது*
*நெஞ்சம் துடித்ததடீ!''* - பாரதி

தலைவியின் நெஞ்சு எப்படித் தவித்தது என்பது தோழிக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால் இங்கு தரப்படும் இரண்டு உவமைகளும் அதை அவள் மனதில் பதியச் செய்கின்றன: தூண்டிலில் குத்தப்பட்டு, துடித்துக்கொண்டிருக்கும் புழு; வெட்டவெளியில வைக்கப்பட்டு காற்றால் அலைப்புறும் விளக்குச்சுடர்!

புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறான் கவிஞன். 'இந்த இடத்தில் முற்றுப்புள்ளி வராதே! அச்சுப்பிழையோ!' என ஐயுற்றுத் தடவுகிறான். புள்ளி அளவாகத் தென்பட்ட பூச்சி இறந்துவிடுகிறது. இவனுக்கு நெருக்கென்கிறது நெஞ்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காட்டெருமை காலடியில் பட்ட தளிர்போல
நீட்டு ரயிலில் எறும்பு நெரிந்ததுபோல்
பூட்டா நம்வீட்டில் பொருள்போல நீமறைந்தாய்!''

மூன்று உவமைகள் கொண்டு பூச்சியின் சாவைப் பதிய வைக்கிறார் மஹாகவி.

இந்துமதிக்குச் சுயம்வரம். பலதேசத்து அரசர்கள் மண்டபத்தில் வரிசையாக நிற்கிறார்கள். தோழி இந்துமதியை அழைத்து வருகிறாள். கையில் மாலையுடன் வரும் இந்துமதியை வைத்த கண்வாங்காது பார்த்தபடி நிற்கிறார்கள் மன்னர்கள். 'இவள் எனக்கு மாலையிட மாட்டாளா!' 'என்ற ஏக்கம் ஒவ்வொருவருக்கும். இந்துமதி நகர்காவலர்கள் ஏந்துகிற தீபம்போல இருந்தாள் என்கிறான் காளிதாசன். தீபம் எவ்விடத்தை நெருங்குகிறதோ, அவ்விடம் பிரகாசம் அடையும்; தீபம் கடந்துபோன இடங்கள் இருள் அடையும். இந்துமதியை எதிர்பார்த்திருக்கும் மன்னர் முகங்கள் பிரகாசமடைகின்றன. அவள் தாண்டிச் சென்றவர்களுடைய முகங்கள் இருளடைந்து விடுகின்றன. ஆகவே, அவளைத் தீபத்துக்கு உவமிக்கிறான் காளிதாசன்.

தன் காதலியின் அழகைப் பார்த்து வியப்பும் பரவசமும் அடைகிறான் பேர்ன்ஸ் (Burns) என்ற கவிஞன்.

''My love is like a red red rose
That's newly sprung in June''

''ஜூன் மாதத்தில் புதிதாகப் பூத்த
செக்கச் சிவந்த ரோஜா மலர்போல
என் காதலி!''

இந்த உவமை புலப்படுத்துவது என்ன?

புதுமை, வண்ணம், வடிவம், அழகு, நளினம், இனிமை களங்கமின்மை, உறுதி - எல்லாவற்றிலும் அவள் ஜூன்மாத ரோஜாவாக அவன் நெஞ்சை அள்ளுகிறாள் என்பதே!

உவமையின் வளர்ச்சி -- செறிவு - உருவகம் எனலாம். தூண்டிற்புழு உவமானம்; நெஞ்சு உவமேயம். இரண்டுக்கும் பொதுத்தன்மை துடிப்பது. கவிஞன் இரண்டையும் வெவ்வேறாகவே பார்க்கிறான். ஆனால்,

''எல்லையில்லாத தோர் வானக் கடலிடை
வெண்ணிலாவே - நீ
இன்பம் அளிப்பதோர் தீவென்றிலகுவை
வெண்ணிலவே!'' - பாரதி

என்பதில், 'கடல் போன்ற வானம்' என்று சொல்லவில்லை: வானத்தைக் கடலாக்கி விடுகிறான். அதுபோலவே, நிலவைத் தீவாக்கி விடுகிறான்.

இறையனுபவத்தைச் சொல்ல வருகிறார் இராமலிங்க அடிகள். உயர்வான - உவப்பான - பொருள்கள் எல்லாவற்றையும் அடுக்குகிறார்.



''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமணமலரே
மேடையிலே வீசுகிற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே ..!''

இறைவனை இளைப்பாற்றும் மரநிழலாக, நிழலில் இருந்து உண்ணக் கிடைத்த கனியாக, ஓடையில் ஊறும் நீராக, நீரிடை மலர்ந்த மலராக, தென்றலாக, அது தரும் இன்பமாக உருவகிக்கிறார் அடிகள்.

புதுக்கவிதையில் பெரிதும் பயிலும் அணி உருவகமே. மரபுவழி வடிவங்களை நிராகரிக்கும் புதுக்கவிதையாளர்கள் உருவகத்தை வரித்துக்கொண்டுள்ளார்கள். மு. மேத்தாவின்

''இந்தப்
பூமி உருண்டையைப்
புரட்டி விடக்கூடிய
நெம்புகோல் கவிதையை
உங்களில் யார் பாடப்போகிறீர்கள்?''

– பொருள் பொதிந்தது.

நெம்புகோல் தத்துவத்தை விளக்கிய ஆர்க்கிமிடிஸ் ''எனக்கு பூமிக்கு வெளியே நிற்க ஓரிடம் தாருங்கள்; பூமியைப் புரட்டி விடுகிறேன்'' என்றார் - 'மேத்தா' கவிதையால் பூமியைப் புரட்ட முடியும் என்கிறார் – கவிதையை நெம்புகோலாக உருவகிக்கிறார்.

செந்நெறி இலக்கியங்களில்தான் இவ்வாறான அணிகள் பயில்கின்றன என்பதில்லை. நாட்டார் இலக்கியங்களையும் இவை அழகுபடுத்துகின்றன.

''வாழைப்பழமே - என்ரை
வலது கையிற் சர்க்கரையே
ஏலம் கிராம்பே - உன்னை
என்ன சொல்லிக் கூப்பிடட்டும்!''

என்ற நாட்டார் பாடலில் வரும் 'வலது கையிற் சர்க்கரை' தரும் பொருட்செறிவு நினைந்து நினைந்து மகிழத் தக்கது!

✻



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இளமைக் குருதி
எதிர்காலத்தின் களமைமூட்டும்
விழித்த வாலிபம் நடைபோடுகுது!''

- ஸ்ரீ. ஸ்ரீ.

தேர் : 1 மாசி - பங்குனி 1995 உலா : 6

# "அம்மா பிள்ளை!"

சமாதானம்; அரசியல் வழி முறையிலான தீர்வு எனத் தான் வரைந்த வண்ணக் கோலங்களை, சந்திரிகா அம்மையார் தானே கலைக்கத் தொடங்கியுள்ளார்.

''சமாதானப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஓர் உண்மையான சமாதானச் சூழல் ஏற்பட வேண்டும் எனவும், தமிழ் மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும் எனவும்'' அவர் ஏற்றுக்கொள்ளவில்லை -

''போருபாயத் தந்திரங்களாக இராணுவத்தினால் உருவாக்கப்பட்ட'', தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினைகளைத் தீர்க்கவும் அக்கறை காட்டவில்லை.

அதனாலே தான், ''ஒரு மக்கள் சமுதாயத்தின் ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கு மேலானதாக, இராணுவத்தின் போரியல் நலன்களுக்கு முதன்மை கொடுத்து'' இராணுவ வழி முறைத் தீர்வை நோக்கி நகர்கின்றார்.

இவையெல்லாம், சிங்களப் பேரினவாதக் கருத்துநிலைக்கு சந்திரிகாவும் ஆட்பட்டிருப்பதையே காட்டுகின்றன.

அவரது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலே மேற்கொள்ளப்பட்ட இனரீதியான பாரபட்சங்களும், ஒடுக்குமுறை நடவடிக்கைகளுமே, தமிழ் மக்கள் மத்தியில் தீவிர போராட்ட உணர்வைத் தோற்றம்பெறச் செய்தன.

வடக்கிற்கு முதன்முதலில் இராணுவத்தை அனுப்பி தமிழர் மீது தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டதும் (1961இல் சத்தியாக்கிரகிகள் மீது), சிறிமாவோ அம்மையார் தான்; ''பிரபாகரன் முழுநாட்டையும் பிடிக்கப் போராட்டம் நடத்துகிறார்'' என, இனவெறிப் பிரசாரத்தில் அண்மையில் ஈடுபட்டதும் இவரேதான்!

பிரான்சின் 'சோபோர்ண்' பல்கலைக்கழகச் சூழலில் தான் பெற்ற 'சமத்துவ - சனநாயக' உணர்வுகளுக்கு மாறாக -

கடந்த இரண்டு தேர்தல்களில் தென்னிலங்கை வாக்காளர் அளித்த 'சமாதான வழி முறைத் தீர்வுக்கு' மாறாக -

பேரினவாதக் கருத்து நிலைக்கு உட்பட்ட 'இராணுவ வழிமுறைத் தீர்வு' நோக்கிச் சந்திரிகா சரிவதானது, ஓரெண்ணத்தையே மேலெழச் செய்கிறது.

அதாவது -

சந்திரிகா உண்மையில், ''அம்மா பிள்ளை'' தான்!

கவிதை
ஓராண்டு நிறைவிதழ் சிறப்புற
வாழ்த்துகிறோம்!

ஞானம் ஆடையகம்
54, பெரியகடை (சோதியா) வீதி,
யாழ்ப்பாணம்.

ஞானம் பல்பொருள் விற்பனைக்கூடம்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிது புதிதாக
இறக்குமதி செய்யப்படும்
நவீன சாதனங்களையே
பாலா வீடியோ பயன்படுத்துகிறது

அனுபவமும்
நுட்பமும் வாய்ந்த படப்பிடிப்பாளர்கள்

*WJMX—12 புதிய மிக்ஸர் மூலம்
இயற்கைக் காட்சிகளை இணைத்து
உங்கள் வாழ்வின் மங்கல நிகழ்ச்சிகளை
வீடியோவில் வழங்குகிறது.*

**பாலா வீடியோ**

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

*மாறன் பதிப்பகம் 664, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org